சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 156/2016

**PW 1 ராமசாமி** **24.02.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது மகன் முரளி இறந்தது சம்பந்தமாக நஷ்டஈடுகோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற முழு விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மசாஆ1 முதல் தகவலறிக்கை விபரங்கள் முழுமையும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2 இரு சக்கர வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதி கீழே விழுந்து அடையாளம் தெரியாத லாரி இருவர் மீதும் ஏறி விபத்தை ஏற்படுத்திவிட்டது என்றால் சரிதான். என் மகன் முரளி , கருப்புசாமி என்பவரின் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றுள்ளார் என்றால் சரிதான். இருவரும் விபத்து சமயம் ஹெல்மெட் அணிந்திருக்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயம் தனது இரு சக்கர வாகனத்தை சரியான திசையில் முறையாக ஓட்டிவந்தார் என்றாலும் விபத்திற்கு கருப்புசாமிதான் காரணம் என்றால் சரிதான். மசாஆ.5 மற்றும் 6 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளில் 2 இரு சக்கர வாகனங்களுக்கும் முன்புறம் சேதம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் கருப்புசாமியின் இரு சக்கர வாகனத்தில் பின்புறமாக அமர்ந்து கொண்டு நாதேகவுண்டன்புதூரில் இருந்து பொள்ளாச்சி வருவதற்காக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தனது இரு

சக்கர வாகனத்தில் சரியாகத்தான் சென்றுகொண்டிருந்தார் என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் தனக்கு முன்புறம் சென்றுகொண்டிருந்த லாரியை முந்தி சென்று அவருடைய பாதையில் லாரிக்கு முன்புறமாக சென்றுகொண்டிருந்தபோது, கருப்புசாமி ஒரு பேருந்தை முந்துவதற்காக வலது புறம் ஏறி வந்து 1ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தில் நேருக்கு நேர் மோதியதால்தான் இரு வாகனங்களுக்கும் முன் இடதுபுறம் சேதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு மோதியதால்தான் கருப்புசாமியும் என் மகனும் இருசக்கர வாகனத்தில் இருந்து வலதுபுறமாக ரோட்டில் விழுந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த லாரி அவர்கள் மீது ஏறி விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ரோட்டின் வலது புறம் தனது பாதையில் சரியாக வந்ததால்தான் அவர் உயிர் தப்பியுள்ளார் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனங்கள் மோதியதில் இருவருக்கும் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டு கீழே விழுந்த நிலையில் அடையாளம் தெரியாத லாரி கவனக்குறைவாக ரோட்டில் வந்து கீழே விழுந்துகிடந்தவர்களை கவனிக்காமல் அவர்கள் மீது ஏறிச்சென்றதால்தான் முரளி இறந்துள்ளார் என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் முரளியின் இறப்பிற்கு காரணமானவர் அல்ல என்றால் சரியல்ல. லாரி ஏறி இறந்ததாகத்தான் முதல் தகவலறிக்கையிலும் அதனால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரர் சம்பந்தப்பட்ட விபத்தில் முரளிக்கு சிறு காயம் மட்டுமே ஏற்பட்டதால் அவரின் இறப்பிற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வகையிலும் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு சம்பந்தப்பட்ட லாரியை கண்டுபிடிக்க இயலாமல் போலிசார் 1ம் எதிர்மனுதாரர் மீது மட்டும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது மகன் பயணம் செய்த இருசக்கர வாகனத்தை

ஓட்டிய கருப்புசாமியையோ அந்த இரு சக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தையோ நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்தினால் இம்மனு ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது மகனிற்கு விபத்து சமயம் 29 வயது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் சொந்த வாகனம் வைத்து வாகனம் ஓட்டி சம்பாதித்தாக சொல்வதற்கு என் மகன் பெயரில் இருந்த பதிவுச் சான்றோ வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல், என் மகன் சொந்தமாக வாகனம் வைத்து வண்டி ஓட்டவில்லை என்றாலும் சம்பளத்திற்கு வாகனம் ஓட்டவில்லை என்றாலும் அதனால்தான் ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. நான் ஒவ்வொரு தலைப்பிலும் கேட்டுள்ள நஷ்டஈடு அதிகம் என்றாலும் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு எதுவும் கொடுக்கவேண்டியதில்லை என்றாலும் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி